௪௯

49. சர்ப்பசாத்திரம்

சர்ப்ப சாத்திரம்

சர்ப்ப சாஸ்திரம்

உடலின் வருத்தம் பாராது பூக்களைக் கொய்து போட்டு, தும்பிக்கையையுடைய விநாயகனின் பாதத்தைத் தவறாது தொழுபவர்கட்கு நல்ல வாக்கு ஏற்படும். மனத்தில் நல்லெண்ணங்கள் தோன்றும். தூய்மையாயிருக்கும். மலரிலிருக்கும் கலைமகளின் அருள் நமக்குக் கிட்டும்.

கடிவாய் குணம் :-

கடித்த இடம் கொடிய விடம் ஏறியவிடம் கண்டம் கறுத்துவிட்டால், கருவிழி சிவந்துவிட்டால், கடித்த விடத்தில் இரத்தம் வழிந்தால்
1. விடம் ஏறியவன் இறந்துவிடுவான்.

உதிரம், நரம்பு, நிணம், சுக்கிலம் ஆகியவை வற்றிவிட்டால் கடித்தவிடம் ஏறிவிடும். சுக்கிலம் கட்டுக்கடங்காமல் வழிந்தால்
2. விடமேறியவன் இறந்துவிடுவான்.

௨40 ஆண்டு உலகினில் வாழ்ந்து, ஊர்ந்து ஊர்ந்து உடல் தேய்ந்து பின் பறக்கும்போது நன்மணியானது சிரசில் தோன்றும்.

4. மணி வைத்திருக்கும் நாகமானது ஊர்ந்து வாழும். மலையிலும் போகும்: மேலோகத்திலும் செல்லும். கண்ணில் நஞ்சானது இருக்கும். இதன்பின் சாவுதான் மிஞ்சும்.

5. கடி இனம் பிறவி இனம் முற்றும்.

தாது லக்கணம் :-

கடித்திடும். பின்னர் மீண்டுவிடும். கொன்றுவிடும். காலனும் வந்துவிடுவான். கடிவாயில் நஞ்சும் இருக்கும். அந்நாகத்தின் பெயர் மாநாகம். A.சண் சூத்திரம் அறிந்து மீளப் போக வேண்டும்.

6. பாதத்தை நினைக்க நல்வழியை அடையலாம்.

கடிவாய் குறியறிதல் :-

கடிவாய் கடுக்கும், எரிந்து வீங்கிக் கொள்ளும். நடுக்கமாகி நீர் அதிகமாகப் பெருக்கெடுக்கும். நாக்கு உலர்ந்து நிறக்குறையும் மந்திரங்கள் ஆறும் படித்து ஊதுவிட மருந்தெல்லாம் இழுத்துவிடுவார்கள். பயன்கள் ஏதுமில்லை.

ஆதியானவனும் அரியானவனுமான.

அற்புதமானவன். சோதி முதலொன்றானவன்.

ஆதியும் சோதியுமானவனுமான அவனை வணங்கி

வாழ்த்திட கடலினின்று எழும் அலைகள் போல

8 கொடிய பல விடங்களும் அழிவிடும்.

கடி மீளுங் குறியறிதல் :-

பிரம்பு கொண்டு அடித்தால் பிரம்பு போல் வீங்கிவிட்டாலும் கடிவாய் உள்ளடங்கி விட்டாலும் உடம்பானது வெதும்பி விட்டாலும் குரும்பை போன்று உடலெல்லாம் சிவந்து விட்டாலும் தண்ணீர் விட்டு விட்டால் நிலத்தளை தாழ்ந்து விட்டாலும் நாடி ஒன்பது நிரம்பி அதிகமானாலும் விடமானது உயிரை மாய்த்து விடாது. இது

12 உண்மையே.

இரத்தமானது கடிவாயின் மீது வந்தாலும் அரம் ஏற்பட்டு வலி வந்தாலும். கை, கால் கட்டி போட்டது போன்ற வலி ஏற்பட்டாலும், உயிர்

13 உண்டெனைத் துணிந்து கூறலாம்.

உயிர் அடங்கிவிட்டது என்று அறிந்தபோதே கடிபட்டவரின் தலை உச்சி நீக்கி வாளோட முத்தி புரையை யடக்கி வேணைச் சாற்றை மேலே விட்டு சூட்டை வைத்து எரிக்க விடமானது கடிவாயில் நிற்கும்.

14

கிரிய ஆட்டம் கொண்ட நாகமானது கடித்து விடமானது தலைக்கேறிவிட்டால் (எட்டாம் வேகம் வரும்). இதற்கான மருந்தை நான் சொல்லக் கேளுங்கள்.

1

15.

உண்டை நசியம்

அத்தி, சித்திரமூலி வேர், வெண்குன்றி வேர், ஆகியவற்றை எடுத்து தாய்ப்பாலில் அரைத்து வத்தி செய்து நசியம்
(16) செய்ய வேண்டும்.

திரிபுகை:- அட்ட மாட நாகம் தீண்டினால் அதன் விஷம் தலைக்கேறினால் மருந்தை நான் சொல்ல நீ
17 கேட்கக் கடவாய். எட்டிக்காய், குமளாங்காய்,
18 தேத்தான் காய், காட்டு மன்விளைக் காய் ஆகிய இந் நான்கைச் சமனாய் எடுத்து உரலிலிட்டு இடித்து
19 வெள்ளாட்டு நீரிலரைத்து அதிலே கரைத்து ஊற வைத்துக் கொள்க. நான்கு நாள் கழித்து சரக்கைப் பிழிந்தெடுத்துவிட்டு மீதமுள்ள சாற்றில் பழந் துணியை தோய்த்து எடுத்து திரியாக்கிக் கொள்க. வெள்ளாட்டின் எருவை

எரித்த புகையின் அத்திரியைக் காட்டி நசியம் பண்ண வேண்டும்.

20. நாசியிலூற்ற மருந்து

பெரும்பட்டைச் சாறு ·3லி எருக்கம்பால் எடுத்து வெள்ளைத் துணியில் தோய்த்து அச்சாற்றைப் பிழிந்து மூக்கிலூற்றத் தீரும். கொடிய விடங்கள் ஏறி மூச்சடங்கி நிற்கும் போது இது பயனளிக்கும்.

21. கெந்தகம், இரசம், காயம் (?)
5லி கூட்டி எருக்கம்பாலை விட்டரைத்து அவ்விழுதைத் துணியில் பூசித் திரியாக்கிக் கொள்க. அத்திரியின் புகையை மூக்குத்தண்டு வழி நசியம் செய்ய கொடிய விடங்கள் இறங்கும்.

23. மகிளாங்கொட்டை, வசம்பு, உள்ளி, மிளகு, சுக்கு, கள்ளி, இலுப்பைப் புண்ணாக்கு, இரசம், வெங்காரம், வெற்றிலை 14, ஆகியவற்றை எடுத்துக் கொள்க. வேப்பெண்ணெயை எடுத்தூற்றி அரைத்துத் துணியில் நனைத்துக்

கொள்க. அதனைப் பக்குவமாய் எடுத்து திரியாக்கிக்
கொள்க. பின் அத்திரியைச் சிறுநீரில் ஊறவைத்து
24. மூக்கில் புகைந்தாற்ற விரியன் பாம்பின் விடம் நீங்கும்.

ஏற்றிட மருந்து :-

முத்தக்காசு, தாளி (?), வேளை, முருங்கை,
ஊமத்து, குப்பைமேனி ஆகிய மூலிகைகளை எடுத்து
அனலில் வாட்டி விரைக்கழியின் மீது ஏற்றிட —
விடத்தை வெளித்தள்ளிவிடும் என்று சித்தர்கள்
25 நம்பினர். இது உண்மைதான்.

கழற்சியிலை, சிறுதும்பை, கருந்துளசி
26. மாவிலிங்கை, வேப்பிலை, கொத்தான், பொடுதலை ஆகிய
-வற்றைச் சமமாயெடுத்து சிறுநீரில் கொதிக்கவைத்து
அச்சாற்றை கடி வாயில் மேல் பூச விடம் நீங்கும்.

அவுரியிலை, பேய்க்கும்மட்டி, முருங்கை
பேய்ப்பீர்க்கு, நொச்சி, பாகலிலை ஆகிய மூலிகைகளை
ஒருபிடி எடுத்து சமமாயிடித்து சிறுநீரை வார்த்து இடித்து, அச்சாற்றை
27. கடிவடத்தில் பூச சங்கரநாணையின் விடந்தீரும்.

எருக்கு வேர், புங்கம் வேர், எட்டி வேர்
ஈச்சம் வேர் வில்வம் வேர், பேய்க்கும்மட்டி வேர்
ஆகிய வேர்களை இளநீர் விட்டு எரித்து கருக்கிட்டு
அதனை பாம்புக் கடி விடத்தின் மீதிட விஷம்
28. நீங்கி நலமாகும்.

செங்கத்தாரி வேர், ஆதளையின் வேர்,
சிங்கம் வேர், வாழை வேர், கற்றாழை வேர் ஆகிய
வேர்களைக் காடி விட்டு காய்ச்சி அந்நீரை
ஏற்றிட அனைத்து விடங்களும் தீரும்.
29. சண்முக நாதனையின் விடம் தீரும்.

தாமரையிலை, ஒருபிடி, மிளகு 10,
காடி 500 மி.லி. எடுக்க. இலையையும் மிளகையும்
நன்கு பொடித்து காடியில் தோய்த்து பிழிந்து
அச்சாற்றை நசியமிட்டும் துவளையிட்டும் செய்ய
விடங்கள் போகும். கோழி, மாடு, மனிதர்
அனைவர்க்கும் விடங்கள் நீங்க ~~இதனை~~
30. இம்மருந்தை நசியமிட்டும் துவளையிட்டும் பயன் பெறலாம்.

<u>துவளை மருந்து</u>:- ஊமத்தையிலை பழுப்பிலை,
குப்பைமேனி, முத்தெருக்கன் செவி, சோதி?
வேப்பிலை ஆகிய சரக்குகளைச் சமமாக எடுத்து

வெதுப்பிச் சாறு பிழிந்து கடிவாயின் மீது
31. பூச விடம் நீங்கும்.

சிறியாணங்கை, முடக்கொத்தான், பேய்ப்புடலம், எட்டி, ஆவரை ஆகிய மூலிகைகளின் வேரைச் சமமாய் எடுத்திடித்துச் சம அளவு ஒன்று சேர்த்து அதனைக் கடிவாயின் மீது பூச விடங்கள் ஏறாது
32. தடுக்கப்படும். நற்பலன் கிட்டும்.

திருநாமப்பாலை, தாளி ;?? ஆடு தீண்டாப்பாளை நிலவேம்பு, காட்டுச்சீரகம் ஆகிய சரக்குகளைச் சமமாய் எடுத்துக் கூட்டி இடித்து
33. அதைக் கடிவாயின் மேல் பூச விடம் நீங்கும்.

கீழ்க்காய்நெல்லி வடக்கில் கிளைத்திருக்கும் துளசி, முருக்கிலை ஆகிய மூலிகைகளைத் தனித்தனியே எடுத்திடித்துச் சமமாய் கொண்டு ~~[illegible]~~ கடி விடத்தின் மீது பூச பல வகை விடமும் நீங்கும்.
34. இது பொய்யல்ல.

பேய்ச்சுரை, கொம்முட்டி, பேய்ப்பீர்க்கு, எடுத்துக்கொள். சிறுகீரை எடுத்துக் கொள்.

மிளகைச் சுண்ணப் பொடித்து சிறுநீரில் போட்டுப்
பிழிந்து உள்ளுக்கும் குடித்து மேலுக்கும் தடவிவிட
35. விடமும் நீங்கும். சூனியமும் நீங்கும்.

வில்வைவேர், முன்னிவேர், வசம்பு உள்ளி
? கல் , ஆகிய மிளகைகளை எடுத்துக்
கொள்க. காடி விட்டு மேற் சொன்னவற்றை அரைத்து
மேலுக்குப் பூச கொடிய விடங்கள், பேய்கள்
அனைத்தும் அழியும். கொள்ளையில் பஞ்சு போல
36 விடங்கள் நீங்கும்.

மேல்பூச மருந்து :- வெள்ளியின் கணவன் முருகனின்
ஆணை இது. ஆணை வணங்கி, வசம்பு, உள்ளி ஆகிய
மருந்துப் பொருட்களை சமமாயெடுத்தரைத்து ~~[illegible]~~ முறித்து
37. கடித்த இடத்தின் மேலே பூச விடங்கள் அழியும்.

பூசணியிலை, பூசணிக் காய், உள்ளி வசம்பு,
தானியிலை ஆகியவற்றைச் சமமாயெடுத்து
அரைத்து அதனை முறித்து உடலெங்கும் பூசி விட்டால் போகா
38 விடங்களும் அழிந்து போகும்.

வட்டத்துத்தி, நறுந்தாளி, வசம்பு,
உள்ளி ஆகிய இவற்றை ஒன்று சேர்த்து இடித்துச்
சாறு எடுத்து மேலே தடவ ஏறிய விடங்கள்
39. இறங்கும்.

பூசணியிலை, தாளி, உள்ளி, வசம்பு இவற்றைச்
சமமாயெடுத்து ஒன்று சேர்த்தரைத்து முறித்துக் குடி
40. வாயினிலும் உடம்பெங்கும் தடவ விடந்தீரும்.

தேள் கொடுக்கியிலை, நாய்ப்பாகல்
வெதுப்படக்கியிலை வெள்ளைப்பூண்டு வசம்பு.
இவற்றை வகைக்குச் சமஅளவு எடுத்து இடித்து
அதனைத் தீயிட்டு முறிக்கச் செய்து உடலெங்கும்
41 பூச பாம்பின் விடம் நீங்கும்.

<u>உள்ளுக்குக் குடி மருந்து</u>:-

மேற்கூறிய மருந்துகளையெல்லாம் எடுத்திடித்துத் தூள் செய்து கொள்க. அதனை நாகம் தீண்டி
44. மயக்கம் ஏற்பட்டால் வலது மூக்கில் வைத்தூதவேண்டும்.

கிரந்தை, முசுமுசுக்கை, குப்பை மேனி, பேய்ப்புடல், முருங்கை, பேய்ப்பீர்க்கு ஆகிய மூலிகைகளைச் சமமாய் எடுத்திடித்து சாறு சேர்த்து வெந்நீரில் கலந்து உள்ளுக்குக் கொடுக்கக் கொடிய
45 விடங்களெல்லாம் ஒழிந்து போகும்.

கையாந்தகரை, பேய்க்குமட்டி, கழற்சி ஆகியவற்றின் வேர்களை எடுத்துக் கொள்க. மிளகுத் -தக்காளி, கோழியவரை ஆகிய மூலிகைகளின் வேரை எடுத்துக் காயவைத்துப் பொடி செய்து வெந்நீரில்
46. கலந்து கொடுக்க விஷம் இறங்கும்.

எட்டி, அவுரி, கோட்டான், பொன் முசுட்டை ஆகிய மூலிகைகளின் வேரைச் சமமாக எடுத்துப் பொடித்து ஒன்று கலந்துக் கொள்கை. அத்துணைத் தேன், பாம்பு கடிபட்டவருக்குக் கொடுக்க
47. விடமிறங்கும்.

கொல்லன்கோவை, தவைச்சுருளி, அம்மைக்கிழங்கு
ஆகிய சரக்குகளை உலர்த்திப் பொடித்துக்கொள்க.
அதனைக் குடுக்கையில் வைத்துக் கொள்க. அப்
பொடியை ~~[illegible]~~ வெருகடியளவு எடுத்து
வெந்நீரில் கலந்து கொடுக்க விரியன் பாம்பின்
48. விடமும் இறங்கிப் போகும்.

(அ) இஞ்சிவேர், கொடிவேலிவேர்,
ஆகிய சரக்குகளைச் சமமாயெடுத்து கூட்டி அதனுடன்
பாக்கையும் தூளாக்கிச் சேர்க்க. இத்தூளைப் பாக்குடன்
சேர்த்தும் கொடுக்க இறவாளி நாகம் தீண்டிய விடம்
49 நீங்கும்.

வட்டத்துத்தி, கொம்மட்டி, மாதுளை
~~[illegible]~~, மிளகு, சாரணை, ~~[illegible]~~ சித்தாவரை ஆகிய
மூலிகைகளின் வேர்களைத் தனித்தனியே தூள் செய்து கொள்க.
அத்தூளைச் சமமாய் எடுத்து பாக்கில் கொடுக்க
50. விடங்கள் நீங்கும்.

மேற்கூறிய இரண்டு பாடல்களிலுள்ள
மூலிகைப் பொருட்களை ஒன்றாய் கலந்து கொடுக்கவும்
விடம் நீங்கும்.

சோற்றில் கொடுக்க மருந்து :-

காட்டுக்கருணை, பழுபாகல், சீந்திலிலைக்
51 கிழங்கு, நாட்டுச்சுண்டை, ஆகாசக் கருடன்கிழங்கு
வெட்டி, செந்தொட்டி, அவுரி, மருக்காரை, வெற்றிலை,
? பேய்ப்பீர்க்கு, பாலை, குருமத்து செம்பொன்நெருஞ்சில்,
சாரணை, காவளை, நாரணிச்சூரி (நத்தைச்சூரி) நீர்வாளை
ஆகிய பதினைந்து மூலிகைகளின் வேர்கள், மூன்று
52 கிழங்கு வகைகளைச் சமமாய் எடுத்து இடித்துக்
கலந்து கொள்க, அதனைப் புதுப்பானையில் நிறைய
அடைத்து வைத்துக் கொள்க. அரிசி ~~ஒ~~ ஒரு படியை
எடுத்து அதில் அம்மூலிகைத்தூளை அரைப் படியைக்
கலந்து, வேகவைத்து இறக்கிக் கொள்க. அம்மருந்தைக்
53 கையிலெடுத்துண்ண பாம்பின் விடந்தீரும். கடித்த
பாம்பும் இறந்து போகும்.

கழற்சி வேரையும்பட்டையையும்
எடுத்து நிழலிலுலர்த்திப் பொடி செய்து வெருகடி
அளவெடுத்து வெந்நீருடன் கலந்து கொடுக்க
விஷங்கள் இறங்கிப் போகும். கடிவாய்விட்டு பஞ்சாகப்
54 பறந்துவிடும் விடங்கள்.
55

பாம்பு கடியையாகக் கடித்து அதனால் உடல் சோர்வுற்று மயக்கம் கொண்டு வீழும்போது பீர்க்கஸ் கூட்டைப் பொடித்து நன்கு பிசைந்து பாக்களவெடுத்து வெந்நீரில் கலந்து கொடுக்க

56. விடம் நீங்கி மயக்கமும் சோர்வும் தெளியும்.

? மாகாகம் வேரைப் பாக்களவெடுத்து நன்றாக அரைத்து விடத்தால் பாதிக்கப்பட்டவருக்குக் கொடுக்க விடமிறங்கும்.

57

கொல்லன் கோவைக் கிழங்கைத் தனியே வெட்டி எடுத்து வைத்துக் கொள்க. பிறகு அதனை நன்றாக அரைத்துப் பாக்களவு தண்ணீரில்

58 கொடுக்க பல விடங்களும் நீங்கும்.

பனையின் பால், கொம்மட்டி மாதுளை வேர் இவற்றை ஐந்தாம் நாளில் ஊறவைத்துக் ~~கொள்~~ கொள்க. அதனை விடம் ஏறியவர்களுக்கு

59. மென்று தின்னக் கொடுப்பாயானால் விடமிறங்கும்.

விடம் வேகமாக ஏறி மயக்கத்தை உண்டுபண்ணும் பெருக்குப் பேய்ப்பீர்க்கின் வேரை எடுத்துப் பொடித்துப் பாக்களவு எடுத்து தண்ணீரில் கலந்து கொடுக்க விடங்கள் பறந்து போகும்.

வேலிப் பருத்தி வேரை பெருங்காயத்தினோடு
சேர்த்தரைத்துக் கொடுக்க விடங்கள் நீங்கும்
இது குழலோதுமவனும் கார்முகில் வண்ணனுமான
61 கண்ணனின் ஆணை.

கடம்பங் கொட்டையைப் பாக்குடனே
சேர்த்து பல நாட்கள் சாப்பிட்டு வர பல விடங்களும்
ஒழியும்.
62.

நல்வேளையின் வடக்கே செல்லும்
வேரைச் செவ்வாய்க் கிழமையில் எடுத்து வந்து
சாணைக்கல்லில் வைத்தரைத்து பதமாக வழித்துக்
63. கொடுத்தால் உடலில் ஏறிய பல விடங்களுமிறங்கும்.

வேம்பின் பழத்தை கொட்டை
நீக்காது முழுதுமாக இடித்து அதைப் பாக்களவு
1 எடுத்து வெந்நீரில் கொடுக்கவும்.

குப்பைமேனியிலை, மனைதாங்கியிலை, பேய்ப்பீர்க்கிலை
ஆகிய இவற்றை வகைக்கு ஒரு பிடி எடுத்துக்
கொள்க. புங்கம் விரை ஒரு பிடி எடுக்க. அனைத்தையும்
பாகயிலைச் சாறு வார்த்தரைத்து அவ்விழுதை
உருண்டையாகத் திரட்டி வைத்து அதை வெந்நீரில்
64. கலந்து கொடுக்கவும். அவ்வாறு செய்ய விடம்
நீங்கும்.

எள்ளின் கொடுக்க மருந்து:-

எள்ளை ஒரு பிடி எடுத்து அதை நன்கரைத்து வெந்நீர்தனில்

எள்ளில் கொடுக்க மருந்து:-

எள்ளை ஒரு பிடி எடுத்து அதை நன்கரைத்து வெந்நீரில் கலந்து உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். எள்ளைக் காடியுடன்
65. அரைத்து மேலே பூச வேண்டும்.

கெந்தகம், மகிளம் வித்து, வசம்பு ஆகிய மூன்றைச் சேர்த்து பேய்ப்பீர்க்கஞ் சாற்றினால் நன்கு ஆட்டி மூஞ்சூறுவின் வயிற்றில் அவ்விழுதை வைத்து விடு. அதனை எட்டாம் நாளில் நன்கு அரைத்து உருண்டை நீளமாக கயிறு போன்று செய்து கொள்க. அதனை நன்கு இழைத்துக் கண்ணில் போட
66 67. நாகந்தீண்டிய விடம் நீங்கும்.

பூவரசு, நேர்வாளம் எடுத்து வேப்பெண்ணெயிற் கலக்கி அரைத்து அதனைக் கயிறாகத் திரித்து வைத்துக் கொள்க. அதனை நாகம் தீண்டிய விடம் தலைக்கேறிய பொழுது
68. தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணிலிட விடம் நீங்கும்.

திப்பிலி, மிளகு, நேர்வாளம், எலுமிச்சங்காய் இவற்றை எடுத்து மூன்று நாளும் அரைத்து உருக்கிக் கொள்க. அதனைக் கயிறாகத் திரித்துக் கொள்க.

விடந்தீண்டியவருக்கு அம்மருந்தை இழைத்துக்
69. கண்ணில் போட விடம் நீங்கி நலம் கொள்வர்.

பெருங்காயம், பொரிகாரம், அரிதாரம், கெந்தகம் ஆகிய மருந்துச் சரக்குகளைச் சமமாய் எடுத்து பேய்ப்பீர்க்கின் சாற்றிலரைத்து உருண்டை செய்து கொள்க. அதனை விழிநீரில் இழைத்துக் கண்ணிலிட
70: தலைக்கேறிய விடம் நீங்கும். இது பிரமன் ஆணை.

எருக்கனின் பழுப்பு இலை, வீழியிலை, ஆகியவற்றை வகைக்கொரு பிடி எடுக்க. இன்றிப் பருப்பு எடுத்து மேற்சொன்ன இலைச்சாற்றில் அரைத்துக் கொள்க. எட்டாம் நாளைத்து அதனுடன் இல்வை மேனி, கொடிவேலியை மாங்காயளவு சேர்த்து அரைத்துக் கொள்க. அம்மருந்தைக் கலயத்தில் வழித்து நிரப்பி வெய்யிலில் வைக்க. கீழ் நோக்கி வழியும்
71 72 தைலத்தைப் பதனப் பத்தி வைத்துக் கொள்க.

அதனுடன் வாலுளுவை அரிசி கெந்தகம் இவற்றை வகைக்கு 5கி எடுத்து தயிலத்தில் சேர்க்க. தயிலம் 20கி ஆக எடுத்துக் கொள்க.

73

குடோரித்தைலம் :-

பேய்ப்பீர்க்கன் விதை 1.3லி, வெற்றிலை 600, எடுக்க. வெற்றிலைச் சாற்றினால் பேய்ப்பீர்க்கன் விதையை அரைத்துக் கொள்க. அவ்விழுதைக் கலத்தில் நிரப்பி வெயிலில் வைக்க. வடியும் தைலத்தைக் குப்பியில் அடைத்து ~~[illegible]~~ பத்திரப்
74. படுத்திக் கொள்க.

தணலில் குடோரித் தைலம் இத்த மருந்து:-

மேற்கூறிய தைலம் 20கி எடுக்க. கெந்தகம் 20கி, சூதம் 5கி இம்மூன்றையும் கலந்து சேர்த்து கலக்கிக் கொள்க. அதனை 4.586.கி அளவு எடுத்து பொன்முசுட்டை இலையில் கொடுக்க பாம்புக் கடியால்
75. ஏற்பட்ட விடம் நீங்கும்.

சித்திரமூலம், மருக்காரை ஆகியவற்றின் வேரைப் பொடி செய்து கொள்க. குன்றிப் பருப்பு, கோழியவரைச் சாறு இவற்றைச் சமமாய்க் கொள்க. இவைச் சாற்றில் மேற்கூறிய வற்றை நன்கரைத்து (கற்பூர?) பொன்னாங்கண்ணி பிணையில் வைத்து வெயிலில் வைக்க வேண்டும். அவ்வாறு வைக்கும் போது வடியும் தைலத்தைப் பரணியில் அடைத்து வைத்துக் கொள்ள வேண்டும். பாம்பு தீண்டிய விடம் ஏறிய பொழுது

76
77

விரியன் கடிக்கு மருந்து:-

விரியன் பாம்பு கடித்து உடல் வீங்கிற்றென்றால்
சூரை, அமுக்கிரா, நீலி, சதுரக்கள்ளி, வெட்டலை,
ஆகியவற்றை எடுத்து இளநீரிலரைத்து உடம்பெல்லாம்
பூச வேண்டும். பூந்தாதுக்கள் உள்ள வாழைப்
78 பூவைத் தண்ணீருடன் குடிக்கத் தீரும்.

நீரில் வாழ்கின்ற, நிலத்தில் வாழ்கின்ற
விரியன் கடித்து வீங்கிவிட்டால் நெல்லுக்கரி,
நீலிவேர், இலுப்பையின் பழைய தோல், கரும்பின் சாறு
ஆகியவற்றை வனிநீராலரைத்து உடம்பின் மேல் பூச
வேண்டும். அவுரி வேரின் மேற்றோலைக் இளநீ
79. நீரால் அரைத்துக் குடிக்க விடம் நீங்கும்.

தலைவிரிச்சான் வேர், அவுரி, வீழி
பெருமருந்து, வன்னி ஆகிய மூலிகைகளை எடுத்துப்
பொடித்து ஒன்றாகக் கலந்து பேய்ச்சுரைக்குடுக்கை
-யில் போட்டு

80.
பெருவிரியன் கடிக்கு மருந்து:-

சுக்கு, நெல்லி, குருந்து, வீழி
தூலி, இண்டன், நீலி, பெருமருந்து, வள்ளி

பழுபாகல் சிறுபாகல் ஆகிய மூலிகைகளின் வேரை
யெடுத்துப் பொடித்து தண்ணீரால் அரைத்து
உடலில் பூச பெருவிரியன் கடித்ததால் ஏற்பட்ட
தடிப்பு, வீக்கம் இவை தீரும். பாம்பு கடித்த
இடம் விரிந்து புண்ணாகியிருக்குமாயின் நறுவிலியின்
பழுத்தை உலர்த்திப் பொடியை அவ்விடத்தின்
81. மீது போட புண் ஆறும்.

பன்றிவத்தி, நிலவுமரிவேர், தூரை,
பன்றிமோத்தைக்கிழங்கு, மூங்கிலரிசி ஆகியவற்றை
எடுத்து வெள்ளிநீராலரைத்து, சூடுபடுத்தி உடலில் பூச
பொரிவிரியன் கடித்ததாலேற்பட்ட விடம் நீங்கும்.
ஆத்தியின் இளந்துளிரை அரைத்து மோரில் குடிக்க
82 விடமிறங்கும்.

<u>விரியனுக்கு நசியம்</u>

புங்கம் வேர், சாரணை, பழுபாகல்,
சிவதை, சுக்கு, பெருங்காயம் ஆகிய மூலிகைகளை
அரைத்து மூக்கில் நசியமிட சாறுவிரியனின் விடம்
83 நீங்கும்.

தக்காளி, நாயுருவி, அவுரி வேர் இவற்றைச்
~~[illegible]~~ சமமாய் எடுத்து நன்கு அரைத்து
விரியன் கடிபட்ட இடத்தின் மீது பூச விடம் நீங்கும்
காணிவிரியன் கடித்து விடம் ஏறியதால் மயக்கம் ஏற்படும்
போது நடுக்கம் ஏற்படும் போதும் இம்மருந்தைப்
84. பூச சரியாகும்.

சிறுபுள்ளடி கோவை, இவற்றின் இலைகளைச்
சமமாய் எடுத்துச் சிறுநீரில் அரைத்து மூக்கில்
நசியமிட்டும், உடம்பின் மேல் பூசவும் செய்தால்
விஷம் ஏறிய பொழுது வீங்காது. ஆறுகால்
85. விரியனின் விடமும் நீங்கிவிடும்.

விரியன் கடித்தால் துவளை:-

காட்டிலே வாழும் செவ்விரியன் கடித்துவீங்கி
விட்டால் குப்பைமேனி மின்னிபாடாவரை (மின்னியாவரை)
ஆகிய மூலிகைகளைச் சிறுநீரில் கசக்கி மூக்கில் நசியமாக
விடவும். அவ்விலைதையே உடம்பின் மேல் துவளையிடவும்
86. செவ்விரியனின் விடமும் நீங்கும்.

விடத்தலையை இடித்து அதன்
? சாற்றை அரைபடியளவு ~~[illegible]~~ உள்ளுக்குக் கொடுக்க
தணவிரியன் தீண்டிய விடம் இறங்கும். கற்றாழையை
87. இடித்து மேலே பூச விரியனின் விடம் நீங்கும்.

சிறிய எருக்கிலையை ~~[illegible]~~
எடுத்து நன்றாக அரைத்துச் சிறுநீரில் கலக்கி
பாம்பு கடித்த கடிவிடம், உடம்பு முழுவதும் தேய்த்து
88. முருக்கேற்றி விட விடம் நீங்கி நலமாகும்.

ஆடுதீண்டாப்பாளை வேர் கவிதும்பை வேர்
எருக்கன்வேர், மருக்காரை வேர் ஆகிய மூலிகை

கனியின் வேரை எடுத்து இடித்து நீரில் ஊறவைக்கிக்
கொள்க. பிறகு பிழிந்து உடலின் பூச
89 விடாங்கள் பல தீர்ந்து போகும்.

துளசி, வெங்காயம், இவற்றை
அரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்துக் கொள்க. நல்
-லெண்ணெயைச் சேர்த்தரைத்துக்காய்ச்சிக் கொள்க.
காய்ச்சிய அத்தைலத்தை உள்ளுக்குச் சாப்பிட
விரியன் தீண்டிய விடம் நீங்கும். அத்தைலத்தையே
உச்சியிலும் வைக்க வேண்டும். அவ்வாறு செய்ய
90
91. விடங்களெல்லாம் முறிந்து போகும்.

கொடிவேரை ~~அரைத்து~~ப்
பசுவின் பாலில் அரைத்துக் கொடுக்க விடம் நீங்கும்.
கஞ்சாங்கோரையை வேகவைத்து அத்தண்ணீரைக்
குடிக்க ~~[illegible]~~ ஆறுவகை விரியன் கடித்த
92 விடமும் நீங்கி நலமாகும்.

ஆடுதீண்டாப்பாளையின் சமூலத்தை
( ) எடுத்து சதுரக்கள்ளிப்
பாலில் மூன்று நாள் ஊறவைக்க வேண்டும். மூன்றா
-வது நாளெடுத்து அரைத்து விழுதாக்கிக் கொள்க.
அவ்விழுதை வேப்பெண்ணெயில் கலந்து காய்ச்சி
93 பதமாக இருக்கும் போது இறக்கி வைத்துக் கொள்க.

அவ்வெண்ணெயை ஆறிய பிறகெடுத்து உடம்பு முழுவதும் தடவவும். வெள்ளைக்கடம்பு, நீலக்கடம்பு வேரை எடுத்து அரைத்து உள்ளுக்குக் கொடுக்க
94. அனைத்து விடங்களும் நீங்கும்.

உதிர் மண்டலங்கடித்தால் மருந்து :-

மண்டலி கடித்து இரத்தம் வந்தால் கோவையிலையின் சாற்றினைப் பிழிந்தெடுத்து உடலில் துவனையிட்டால் விரியன், மண்டலி புடையன் ஆகிய பாம்புகளின் விடங்கள் பஞ்சாய்ப் பறந்து
95 போகும்.

சீத மண்டலங் கடித்தால் மருந்து:-

பன்றிமொத்தை, காயின்வேர்

இவற்றைக் கொன்றைப் பாலில் அரைத்து உடலில், கடி வாயில் பூசிட, ~~[illegible]~~ சீத மண்டலி கடித்ததால்
96 ஏற்பட்ட வீக்கம், இரத்தம் கன்றுதல் ஆகியவை நீங்கும்.

சோறை கடிக்கு மருந்து :-

சோறை. கடித்து உடம்பெல்லாம் தேமல் வந்தது போல் தடித்திருக்குமாயின் எருக்கஞ் செடியின் கொம்பை ஒடித்துப் பொழித்துக் கொண்டு.

அப்பொடியுடன் பனை வெல்லத்தைக் கரைத்து
7 துளிகள் விட்டு அதனை நன்கு கலந்து குடிக்கச்
செய்தால் விடம் நீங்கும். தடிப்பு நீங்கும்.
10 துளிகளும் தரலாம்.

இம்மருந்தை சொறான் விடத்துக்கு
ஒன்று விட்டொரு நாளாக ஏழு நாள் கொடுக்கவும்.
97 தேள் கடிக்கி ஒரு நேரம் கொடுக்கவும்.

சொறான் கடித்தால் அக்கடி விடத்தைச்
சிறுகக் கீறி விட வேண்டும். வெற்றிலை பாக்கு
சுண்ணாம்பு மூன்றும் கூட்டி அதனுடன் இப்பைமெனிச்
சாற்றையும் சேர்த்து அக்கடி வாயில் பூச வேண்டும்
அவ்வாறே மூன்று நாட்களும் பூச விடங்களெல்லாம்
98 நீங்கிப் போகும்.

இரத்தவிரியன், இரத்தபுடையன், உதிர்மண்டலி, வீங்கு மண்டலி கடித்தால் மருந்து

வெள்வேலம்பட்டையை எடுத்திடித்து
மோருடன் கரைத்து பட்டையைப் பிழிந்து விட்டுக்
குடித்தால் விடம் மீளும். சொறி மண்டலி கடித்தால்
பொன்முசுட்டை வேரைப் பாலிலரைத்துப் பூச நீங்கும்.
சொறி அதிகமானால் நன்னாரி வேரைப் பாலில்
99. அரைத்துக் கொடுக்க நீங்கும.

வீங்கு மண்டலி கடித்து உடல் வீங்கிவிட்டால்
ஈங்கை
?- இண்டங்கொடி, நூரை, இருப்பைப்பழம், மேக்கிரட்டை
வேர் ஆகிய மூலிகைகளை அரைத்துக் குடிக்க
௯௯ விடம் நீங்கும். உடல் வற்றும்.

வழுணை கடிக்கு மருந்து :-

ஏலம், மிளகு, வக்கணையின்வேர் இவை
மூன்றையும் சரிசமமாய் எடுத்து கற்பூரவள்ளியின்
சாற்றில் சேர்த்தரைத்து பக்குவமாக உருண்டை
செய்து நிழலிலுலர்த்தி தண்ணீரில் உரைத்துக்
௱ கண்ணிலிட — வழுணைக் கடி நீங்கும்.

வழுணை கடித்து உடல் சோர்வுற்றால்
வராகிக்கிழங்கை எடுத்தரைத்து உலர்த்தி மாங்காய்
அளவு உருட்டி பாலில் சேர்த்துக் குடிக்கவும்.
எருமைச் சாணியைத் தரையில் விழாமல் எடுத்து
101. கடிவாயில் வைத்துக் கட்ட விடம் நீங்கும்.

~~[illegible]~~, கோழிமுட்டை, கடுக்காய்
~~[illegible]~~ திருகுகள்ளி வேர், அரிதாரம் ஆகியவற்றைப்
பாலில் அரைத்துக் குடிக்க வேண்டும். வராகிக்
கிழங்குடன் உமிம்பிலி வேரைச் சேர்த்தரைத்துக்
10௨. குடிக்க விடம் நீங்கும்.

எருக்கு, அமுக்கிறான், நொச்சிச்சாறு
எடுத்துக் கொள்ள வேண்டும். பேய்ச்சுரை, இலுப்பை,
திப்பிலி வாகை, புங்கு, நீலி, நன்னாரி வேர்
பின்னைக் கொடிக்கீரை, காட்டவரை, ஆகிய
மூலிகைகளை ஒன்று சேர்த்தரைத்து உடம்பெல்லாம்
தடவி வேது போட விடம் நீங்கும்.

௱3

தாளி, வசம்பு, உள்ளி, ஆகிய மூலிகைகளை
சமமாக எடுத்துக் கொண்டு அரைத்துச் உடம்பில்
மேல் பூசி துவளையுடைய கடி விடத்தினால் ஏற்பட்ட
வீக்கங்கள் விடங்கள் நீங்கிப் போகும்.
இதை விரியன் கடி, வழலைக்கடி, மண்டலிகடி
ஆகியவற்றுக்கும் போட பலனளிக்கும்.

௱4.

<u>வண்டு கடிக்கு மருந்து</u> :- வண்டு கடித்து விட்டால்
உடம்பின் சொறி ஏற்படும். உடம்பில் பக்குபக்காக
ஏற்பட்டு பிய்ந்து விடும். வண்டு கொல்லிலை
நெல்லிக்காயளவு எடுத்து வெந்நீரில் கரைத்து
எட்டு நாட்களுக்குள் கொடுக்க வண்டு கடி நீங்கும்.

௱5.

பங்கம்பாளைச் சிறிது சிறிதாகத் ~~தின்று~~
பல நாட்கள் சாப்பிட வேண்டும். அவ்வாறு
சாப்பிட்டு வர வண்டு கடிகளெல்லாம் நீங்கிப்
போகும்.

சங்கம் வேரை வெந்நீரில் கலந்து எட்டு நாளைக்குக் குடிக்க வேண்டும். புளி உப்பு தவிர்க்க வேண்டும். நெருக்கமும் விடமும் நீங்கும்.

106 சூறாகமேக்கன் கடித்தால் :-

சூறாக மேக்கன் கடித்து உடலானது மிகவும் தளர்ந்து விட்டால் வாழ் நாளைக்கூட்டும் பெருமையுடைய வன்னியிலையைப் பறித்து வந்து காடியுடன் துவைத்து ~~[illegible]~~ அரைபடியாகக் கொண்டு நான்கு நாட்கள் ~~[illegible]~~ அதனை உடம்பில் துவளைவிட்டுப்பூச ~~[illegible]~~ வேண்டும். அவ்வாறு செய்ய சூறாக மேக்கன் கடி, காணாவிடாய்கள் ஒழிந்து போகும்.

107 மேகிசமாடிக் கட்டுகிறதுக்கு:-

பங்கம்பாளை, கரிப்பாலை, அவுரி மாதுளை, கள்ளி, சிறியாணங்கை, எட்டி, கோட்க - சாலை, கொடுக்கொடி, ~~[illegible]~~, ஆகிய மூலிகைகளை எடுத்துக் கொள்க.

வெள்ளைநாற்றின் வடக்குவேரை யுமா?

ஆடாதோடையின் வடக்கு நோக்கிச் செல்லும் வேரை கிரணத்தன்று செவ்வாய்க்கிழமை யின் போது எடுத்து வந்து செம்புப் பாத்திரத்தில்

வைத்தடைத்துக் கொள்க. இரணம் விடும் போது அவ்வேரை எடுத்து வெள்ளியின் தோய்த்துத் தெளித்துக் கொள்க. அதனை உன் மோதிரத்தின் மேல் படியும் படி தடவி விடுக. பின் அதனைக் கடி வாயின் மீது வைத்திறுக்க விடம் நீங்கும்.

109

பச்சைப்பாம்பு, பச்சோந்தி இவற்றின் வாலை வெட்டிவிட்டு செம்பின்

110.

உப்பினி, கோடகசாலை, சிறைப் பெருமாள், தேவசி முருங்கை, ஆகிய மூலிகைகள் நான்கின் வேரைச் செம்புப் பாத்திரத்தில் அடைத்து வைத்து அதனை உச்சியில் வைத்து விட விடந்தீரும். விடம் அதிகமாக ஆகிவிட்டால் அவ்வேர்களைத் தண்ணீரில் சேர்த்துக் கொடுக்க விடம் நீங்கும்.

111.

, காட்டத்தி, அவுரி, குட்டி விளா, குட்டிவேல் ஆகிய மூலிகைகள் ஐந்தைச் சமமாய் எடுத்துக் கொள்க. மூலிகைகளை நூலில் சேர்த்துக் இறுக்கமாகக் கட்டி தலையில் வைக்க உரத்த விரியனின் கடிக்காது.

கீழ்க்காய் நெல்லி வேரை எடுத்து வந்து பாம்பு இருக்கும் வளைக்கு வாசலில் கட்டி வைக்க வேண்டும். அவ்வேரையே இரிசமாகக் கட்டிக் கொள்ள பாம்பு கடிக்காது.

113.

கோடகசாலை இலையுடன் சிறியா-ணங்கையின் இலையையும் சேர்த்துக் கசக்கி கையில் வைத்துக் கொள்ள வேண்டும். அதனுடன் பாம்பைக் கையில் எடுத்தாலும் கடிக்காது. பின்னர் மேற்கூறிய மூலிகைகளின் வேரையே இரிசமாகக் கட்டிக் கையில் வைத்துக் கொள்ள பாம்பு கடிக்காது.

114.

ஞாயிற்றுக்கிழமை காலை சென்று காப்பு கட்டி இருவை வேண்டி மகிழத்தை மூன்றுமுறை சுற்றி பலியிட்டு வடக்கு வேரைக் இரிசம் செய்து விருப்பமுடன் தலை மேல் வைத்துக் கொள்ள பெரிய பாம்பு கூட தன் வாயைத் திறக்காது. வெந்நீரில் வேரைப் பொடித்துக் குடிக்க விடமுந்தீரும். அரிப்புகளும் நீங்கிவிடும்.

115

116.

(நாலாவது வேகம்)
விடம் அதிகமாக ஆகிவிட்டால்
அதற்கும் மருந்துண்டு. நொச்சிக் கொழுந்து வசம்பு,
அவுரி, மிளகு, உள்ளி ஆகிய மூலிகைகளை
எடுத்துச் சிறுநீரில் ( ) அரைத்து
நசியமாக விட விடம் நீங்கும்.

117 (மூன்றாம் வேகம்) சாரணையின் இந்துப்பு, கடுகு
மிளகு, சுக்கு ஆகிய மருந்துச் சரக்குகளை
வெற்றிலைச் சாற்றாலரைத்து மூக்கில் நசியமாகச்
செய்திட விடம் நீங்கும்.

118 (அஞ்சாம் வேகம்) விடமானது தலைக்
கேறிவிட்டால் விடம் நீங்க கீழ் சொல்லும்
மருந்தை நசியமிட வேண்டும். வசம்பு, சுக்கு,
சாரணையின் வேர் ஆகிய மூலிகைகளையெடுத்து
சிறுநீர் ( ) விட்டரைத்து நசியமிட
விடம் நீங்கும்.

119